# பயணிகள் இறங்கி மாறவேண்டிய நிலையங்கள்

திருவொற்றியூர் விம்கோ நகரில் இருந்து பயணிக்கும் பயணிகள் ஒரு குறிப்பிட்ட ரெயில் நிலையங்களுக்கு செல்வதாக இருந்தால் சில ரெயில் நிலையங்களில் இறங்கி மற்றொரு பிளாட்பாரத்தில் நிற்கும் ரெயிலில் ஏறிசெல்ல வேண்டும். அந்தவகையில் திருவொற்றியூர் விம்கோ நகர் மார்க்கத்தில் இருந்து கோயம்பேடு, திருமங்கலம் செல்லும் பயணிகள் சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இறங்கி மற்றொரு பிளாட்பாரத்தில் வரும் ரெயிலில் ஏறி செல்ல வேண்டும். அதேபோல் திருவொற்றியூர் விம்கோ நகரில் இருந்து பரங்கிமலை செல்பவர்கள் சென்டிரல் அல்லது ஆலந்தூரில் இறங்கி மற்றொரு பிளாட்பாரத்தில் நிற்கும் ரெயிலில் மாறி செல்ல வேண்டும் என்று மெட்ரோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பொதுமக்கள் இலவச பயணம்

சென்னையில் மெட்ரோ ரெயில் தொடக்க விழா நடக்கும் நாட்களில் பயணிகள் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். அதனடிப்படையில் வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை 9 கிலோ மீட்டருக்கு நேற்று பகல் 2 மணியில் இருந்து இரவு 11 மணி வரை பயணிகள் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். பெண்கள் குழந்தைகளுடன் ஆர்வமாக பயணம் செய்ததுடன், உயர்த்தப்பட்ட பாதையில் ரெயில் செல்லும் போது காணப்படும் கடற்கரை காட்சிகளையும் புகைப்படங்களும் செல்பியும் எடுத்து மகிழ்ந்தனர்.

# 2 லட்சம் பேர் பயணம்

சென்னையில் தற்போது 45 கிலோ மீட்டர் தூரத்திற்கு இயக்கப்பட்டு வரும் மெட்ரோ ரெயில் சேவையில் சராசரியாக 1 லட்சத்து 30 ஆயிரம் பயணிகள் வரை தினசரி கையாளப்பட்டு வந்தனர். தற்போது வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை ரெயில் இயக்கப்படுவதால் தினசரி 2 லட்சம் பயணிகள் கையாள வாய்ப்பு உள்ளது. அதேபோல் பயணிகள் எண்ணிக்கை அதிகரிப்பால் வாகனங்களின் எண்ணிக்கையும் குறையும், கரியமில வாயுவின் அளவும் 30 ஆயிரத்து 198 டன் குறையும் என்று மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.